Nestlé
Good Food, Good Life

Nestlé Lanka PLC News Release

Colombo: 15 March 2016

**'சிறுவர்கள் தினந்தோறும் ஆரோக்கியமான காலையுணவை கட்டாயமாக உட்கொள்ள வேண்டும்' என்பதை வலியுறுத்தும் வகையில் *மைலோ* தனது நாடளாவியரீதியிலான பிரச்சாரத்தை ஆரம்பித்துள்ளது**

சிறுவர்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுவதை ஊக்குவித்து, அவர்களுக்கு ஆதரவளிக்கும் முயற்சிகளை மிக நீண்ட காலமாக தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்துள்ள ஒரு வர்த்தகநாமமான *மைலோ*, சிறுவர்கள் ஆரோக்கியமான காலையுணவை உட்கொள்ளவேண்டியதன் முக்கியத்துவத்தை ஊக்குவித்து, ஆரோக்கியமான வாழ்க்கைமுறையை கடைப்பிடிப்பதை ஊக்குவிக்கும் முகமாக மற்றுமொரு பாரிய முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளது.

இலங்கையிலுள்ள சிறுவர்கள் மத்தியில் அனேகமானோர் காலையில் சீரான காலையுணவை உட்கொள்ளாது பாடசாலைக்குச் செல்கின்றனர் என அண்மைய ஆய்வுகள் புலப்படுத்தியுள்ளன (மூலம்: ஆரோக்கியம், ஊட்டச்சத்து மற்றும் நலன் தொடர்பான புரிந்துணர்வு மற்றும் வரைபு ஆய்வு - TNS Sri Lanka for Nestlé Lanka, 2012). இரவில் நீண்ட நேரமாக எவ்விதமான உணவையும் உண்ணாது, காலையில் முதன்முதலாக உள்ளெடுக்கும் உணவாக காலையுணவு அமைந்துள்ளதுடன், நாளொன்றில் மிக முக்கிய உணவாக காலையுணவு கருதப்படுவதால், மேற்குறிப்பிட்ட புள்ளிவிரங்கள் மிகவும் கவலையளிப்பதாக உள்ளன. வளரும் சிறுவர்கள் மேலும் விழிப்புடன் திகழவும், சிறந்த அவதானத் திறனைக் கொண்டிருக்கவும், பாடசாலையில் கற்கும் விடயங்கள் மீது இன்னும் சிறப்பாக கவனம் செலுத்தவும் காலையுணவு உதவுகின்றது. சீரான மற்றும் ஊட்டச்சத்து நிரம்பிய காலையுணவு நாள் முழுவதும் துடிப்புடன் செயற்படுவதற்கு போதுமான சக்தியை அவர்கள் பெற்றுக்கொள்வதையும் உறுதிசெய்யும்.

"1960 ஆம் ஆண்டு முதல் *மைலோ* இலங்கையில் நிலைபெற்றுள்ளது. இலங்கையிலுள்ள சிறுவர்கள் 50 ஆண்டுகளுக்கும் மேலாக விரும்பிவந்துள்ள ஒரு வர்த்தகநாமம் என்ற வகையில், இலங்கையிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் தமது தினத்தை ஆரம்பிப்பதற்கு முறையான ஊட்டச்சத்தை உள்ளெடுத்து, இந்த நல்நோக்கத்தை சிறப்பாக முன்னெடுப்பதை ஊக்குவிக்கும் வகையில் அவர்களை அறிவூட்டவேண்டியது மிகவும் பாரியதொரு பொறுப்பு என நாம் உணர்ந்துள்ளோம்" என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் பான வகை உற்பத்திகள் பிரிவின் உதவித் தலைமை அதிகாரியான நோர்மன் கன்னங்கர அவர்கள் குறிப்பிட்டார். "சிறுவர்கள் மத்தியில் 'வெற்றியுணர்வை ஊக்குவிக்க' உதவுவது *மைலோவின்* தாற்பரியமாக அமைந்துள்ளதால் காலையுணவின் முக்கியத்துவத்தை அவர்கள் உணர்ந்து கொள்வதற்கு அவர்களை வழிநடாத்துவது எம்மைப் பொறுத்தவரையில் மிக முக்கியமானது. சீரான உணவடன், மோல்ற்று, பால் மற்றும் கொக்கோ ஆகியவற்றுடன் விட்டமின்கள் மற்றும் கனியுப்புக்களின் செழுமை நிரம்பிய இயற்கை நலச்செழுமை கொண்ட *மைலோவை* உள்ளெடுப்பது சிறுவர்கள் தமது நாளை முற்றுமுழுதான சக்தியுடன் ஆரம்பிக்க உதவி, நாள் முழுவதும் துடிப்புடன் திகழுவதற்கு உதவுகின்றது."

நாட்டில் அதிக எண்ணிக்கையானவர்கள் ஒன்றுகூடி காலையுணவை உள்ளெடுக்கும் வகையில் கொழும்பு விளையாட்டு அமைச்சின் மைதானத்தில் *மைலோ* தனது காலையுணவுப் பிரச்சாரத்தை ஆரம்பித்து வைத்துள்ளது. இந்நிகழ்வில் 6,000 சிறுவர்களும், அவர்களின் பெற்றோரும் ஒன்றுகூடி, தமது *மைலோ* கோப்பைகளை கைகளில் உயர்த்தியவாறு, ஒவ்வொரு நாளும் ஆரோக்கியமான காலையுணவை உள்ளெடுப்போம் என்ற உறுதிமொழியை அளித்தனர்.

அடுத்து வரும் சில வார காலப்பகுதியில் காலையுணவின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வைத் தோற்றுவிக்கும் நோக்குடன் ஒவ்வொரு 400 கிராம் *மைலோ* பக்கட்டுடனும் இலவச 'Breakfast mugs' களை *மைலோ* வழங்கவுள்ளது. 'MILO@Breakfast' என்ற தொனிப்பொருளின் கீழ் நாடளாவியரீதியில் சுப்பர்மார்க்கட்டுக்களில் விழிப்புணர்வைக் கட்டியெழுப்பும் இடைச்செயற்பாடுகள் கொண்ட ஊக்குவிப்புக்களை இந்த வர்த்தகநாமம் முன்னெடுக்கவுள்ளது. இதன் மூலமாக காலையுணவின் முக்கியத்துவம் தொடர்பாக அன்னையர் மத்தியில் நேருக்கு நேர் தனிப்பட்ட முறையில் அறிவூட்டல் அமர்வுகளை முன்னெடுப்பதுடன், சிறுவர்களுக்கு ஆர்வமூட்டுகின்ற வகையில் காலையுணர்வு தொடர்பான விளையாட்டுக்களையும் ஏற்பாடு

செய்யவுள்ளது. இந்த விடயம் தொடர்பாக அன்னையர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு *மைலோ* மோட்டார் வான்கள் நாடெங்கிலும் பயணிக்கவுள்ளன.

தொழில்நுட்ப அறிவுமிக்க தனது நுகர்வோரை எட்டும் வகையில் *மைலோ* ஸ்ரீ லங்காவின் முகநூல் பக்கத்தில் (facebook.com/MILOSrilanka) இடைச்செயற்பாடுகள் கொண்ட *மைலோ* காலையுணவுச் சுற்றுலா ஒன்றையும் *மைலோ* ஏற்பாடு செய்யவுள்ளது. இந்த மெய்நிகர் சுற்றுலாவில் விரைவாகவும், இலகுவாகவும் பின்பற்றக்கூடிய காலையுணவு யோசனைகள் தொடர்பான பல்வேறுபட்ட அம்சங்கள் உள்ளடங்கியுள்ளதுடன், இதன் மூலமாக இலங்கையில் அனைத்து குடும்பங்களும் ஊட்டச்சத்தும், சௌகரியமும் கொண்ட காலையுணவை உள்ளெடுப்பதற்கு *மைலோ* வழிகாட்டவுள்ளது.

---

**Visit www.nestle.lk for more information on Nestlé. For media queries, please contact:**

**Damitha Kulatunga**
Corporate Public Affairs Manager
Mob: 0777915949, Off: 2699991 (ext 4540)
damitha.kulatunga@lk.nestle.com

**Samantha Mendis**
Corporate Communications Manager
Mob: 0773405154, Off: 2699991 (ext 4524)
samantha.mendis@lk.nestle.com